## சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## OS. No. 262/2023

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ம் நாள் வியாழக் கிழமை PW1ன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.10.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | சாந்தா (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 08.08.1990-தாவா சொத்துக்களை பொறுத்து ஜெகதீசனுக்கு முதல் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரய ஒப்பந்தம் அசல் ( பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்தம் என்ற 2 ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ.1 ஆகவும்
2) 20.01.2022 முதல் பிரதிவாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும்
3) 24.02.2022- நான் முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும்
4) முதல் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 ஆகவும்
5) 15.06.2022- தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து முதல்பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் பதிவிறக்க நகல் வா.சா.ஆ. 5 ஆகவும்
6) 27.05.2022- தாவா 3, 4 அயிட்ட சொத்துக்களை பொறுத்து முதல்பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் பதிவிறக்க நகல்வா.சா.ஆ. 6 ஆகவும்
7) 01.02.2023- வில்லங்கச்சான்று வா.சா.ஆ. 7 ஆகவும்

8) 08.03.1991-ம் தேதியில் முதல் பிரதிவாதியின் 08.08.1990 -ம் தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தில் ஏற்படுத்தப்பட்ட வரவு குறிப்பு ( 2 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கிற்காக வாதியால் ஏற்படுத்தப்பட்ட வரவு குறிப்பு என்ற ஆட்சேபணையுடன்) வா.சா.ஆ. 8 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**